3 காலணா Regd. No. M. 2811.

சுதந்திரச் சங்கு


" சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாணிக் கெல்லா மெடுத்தோதுவோமே "

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர்.
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

காரியாலயம் : பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. வியாழன் 2-2-33

குனிந்தால் குதிரை ஏறும்



வட்ட மேஜை வீரரான கேல்கர் இப்போது புதிய வாத்தியம் வாசிக்கத் தொடங்கி யிருக்கின்றார். 'பரஸ்பர ஒத்துழைப்பு' என்பதே அந்த வாத்தியம். 'புதிய அரசியல் திட்டம்' என்ற குதிரை மீது ஏறி சவாரி செய்யலா மென அவர் கூறுகின்றார். ஆனால் 'பரஸ்பர' ரீதியை யொட்டி ஒத்துழைப்போர் மீதே அந்தக் குதிரையானது ஏறி சவாரி செய்யப் போகின்ற தென்பதை அவர் அறியாரா? ஸபாஷ் 'பரஸ்பர' சவாரி!

காங்கிரஸ் மகா சபை

வருடா வருடம் இந்த மாதங்களில் காங்கிரஸ் மகா சபை கூடுவது வழக்கம். தேச பக்தர்கள் கூடி நாட்டின் ராஜீய நிலையை ஆராய்ந்து அதற்கேற்ப திட்டங்களை வகுப்பது அந்தந்த வருட காங்கிரஸ் மகா சபையின் வேலையா யிருந்து வருகிறது. 'இந்தியன்' என்ற உணர்ச்சியோடு 'காங்கிரஸ்' என்ற எண்ணமும் கலந்து உதிக்கும் சகாப்தத்தில் நாம் இருக்கிறோம்.

அப்பேர்ப்பட்ட தேசிய மகா சபை சென்ற வருடத்தில் பகிரங்கமாகக் கூடவொட்டாமல் சர்க்கார் முட்டுக்கட்டை போட்டனர். இந்த வருடத்திலும் அகில இந்திய காங்கிரஸைக் கூட்டப் போகின்றார்களாம். 'தண்டி தினமா'கிய மார்ச் 12ம் தேதியில் வங்காளத்தில் முஸ்லீம் தலைவர் அபுல் கலாம் ஆஸாதின் அக்ராஸனத்தின் கீழ் காங்கிரஸ் மகா சபை நடைபெறலாமென 'பிரீ பிரஸ்' செய்தி கூறுகிறது.

அவசரச் சட்ட ஆட்சி குமுறி நிற்பது வாஸ்தவமே யாயினும் அதன் சட்டப்படியே ஆராய்ந்தாலும் 'காங்கிரஸ் மகா சபை' சட்ட விரோதமான சங்கமாகாது. சமீபத்தில் நடந்த மூன்றாவது வட்ட மேஜையின் முடிவுகளைப் பற்றியும், இனி வரப் போகின்ற 'வெள்ளைக் கடுதாசி'யைப் பற்றியும் காங்கிரஸ் வாதிகள் கலந்து யோஜனை செய்ய வேண்டியதும் அவசியமா யிருக்கிறது. நிற்க,

சிறையி லிருப்பவர்களோடு ராஜி பேசத் துணிந்தால் சர்க்காருடைய கௌரவம் குறைந்து போகுமென்று டெல்லி சர்க்கார் நினைக்கின்றார்களாம். இதைத்தான் 'வறட்டு ஜம்பம்' என்று கண்டிக்க வேண்டும். எத்தகைய அரசியல் இந்தியாவுக்குத் தருவதாயினும் அப்போது காங்கிரஸ்காரர்களினின் உதவி யில்லாவிடின் பிரயோசன மில்லையென மிதவாதிகளும் கூறுகின்றனர். அது சர்க்கார் செவியில் விழவில்லையா?

இந்த இரண்டு வருடங்களாக தேசமடைந்துள்ள நிலைமையை சர்க்கார் காணவில்லையா? சமீபத்தில் நடந்த "சுதந்திர தின"க் கொண்டாட்டத்தினின்று காற்று எந்தப் பக்கம் அடிக்கிறது என்பதை அதிகாரிகள் உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். ஆகவே 'வறட்டு ஜம்பம்' என்ற பீடத்தினின்று இறங்கி காங்கிரஸோடு சமாதானமாவதைத் தவிர்த்து சர்க்காருக்கு வேறு வழி யிருப்பதாகத் தோன்றவில்லை. சர்க்கார் செய்வார்களா?

வாக்கை நிறைவேற்றுக!

மகாத்மாவின் வேண்டுகோள்

என்றும் தமது மனத்தில் குடி கொண்டுள்ள குஜராத்திய மக்களுக்கு (ஜாதி ஹிந்துக்களுக்கும், ஹரி ஜனங்களுக்கும்) முதல் முதலாக மகாத்மாஜி எரவாடாவிலிருந்து கீழ்க்கண்ட வேண்டுகோளை விடுத்திருக்கிறார். குஜராத் தீண்டாமை விலக்குச் சங்கத்தார் இதனை 40 ஆயிரம் பிரதிகளாக அச்சிட்டு ஒவ்வொரு வீட்டிலும் கொண்டு போய் வழங்க ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

ஜாதி ஹிந்துக்களுக்கு

காந்திஜி விடுத்துள்ள வேண்டுகோள்:
"1915-ம் வருஷத்திலிருந்து நான் உங்கள் மத்தியிலேயே தங்கியிருக்கிறேன். தீண்டாமை விலக்கைப்பற்றி நான் பன்முறை உங்களிடம் பேசியிருக்கிறேன். நீங்களும் அதைக் கண்டித்திருக்கிறீர்கள். அது மட்டுமன்றி அதையொழித்து விடுவதாகவும் வாக்களித்திருக்கிறீர்கள். அந்த வாக்கை இப்பொழுது நிறைவேற்றுங்கள். இல்லையேல்—என்னவாகும் என்பதை நான் சொல்லவும் வேண்டுமா?

"ஜாதியில் உயர்வு, தாழ்வு என்பதே எனக்குக் கிடையாது. தன்னை உயர்ந்தவனாக எண்ணுபவன் பாவம் செய்கிறான் என நமது மதம் போதிக்கிறது. கடவுள் பல வகுப்புகளைச் சிருஷ்டிக்கிறார்; ஆனால் உயர்வு, தாழ்வை அவர் உண்டு பண்ணுவதில்லை.

தீண்டாமையை அனுஷ்டிப்பது தர்மமேயாகாது. ஹிம்ஸையை என்று உலகம் தர்மமாக ஏற்கிறதோ அன்று தீண்டாமையும் தர்மமாகும். தீண்டாமையை ஒழிப்பதால் வர்ணாசிரமதர்மம் அழிந்து விடாது.

"என்னைப் பலர் திட்டுகிறார்கள். நான் எழுதும் விஷயங்களைப் பிய்த்தெடுத்துத் தப்பர்த்தம் கற்பிக்கிறார்கள். இது கண்டு கோபிக்க வேண்டாம். உலகிற்கு சேவை புரிபவர்கள் இங்ஙனம் நடத்தப்படுவது சகஜமே."

ஹரி ஜனங்களுக்கு

"விரைவிலோ அல்லது நாள் கழித்தோ கோயில்கள் உங்களுக்குத் திறந்து விடப் படுவது நிச்சயம். ஆனால் தெய்வ பக்தர்கள் கூடிய வரையில் உள்ளும், புறமும் பரிசுத்தமாக இருக்கவேண்டும். "மற்ற ஹிந்துக்கள் அசுத்தமாக இருக்கிறார்களே" என்று சொல்லாதீர்கள். தவறு செய்பவர்களிடமிருந்து நீங்கள் பாடம் கற்கக் கூடாது,"

மக்குகளின் விடைகள்

உத்தியோக வேட்டைக் காரர்களுக்கென்று சர்க்கார் நடத்திய பரீக்ஷையில் பிள்ளைகள் அசடு வழிந்த விதத்தை ஜனவரி 28, 30-ந் தேதிய 'சங்குகளி'ல் காட்டினேம். அவர்களின் இன்னும் சில அதியழகான (?) பதில்கள் பின் வருமாறு :—

கேள்வி :— 'கங்காரு' என்றால் என்ன ? (Kangaru=ஓர் ஆஸ்திரேலிய மிருகம்).

பதில்கள் :—ஒரு அதிசயப் பறவை ; ஆப்பிரிக்காவிலுள்ள நீக்ரோ ஜாதியார் வசிக்கும் சிறு குடிசைகள் ; கஞ்சம் ஜில்லா சில்கா ஏரியிலுள்ள ஒரு பிராணி ; செவிக்கு இன்பமாக பாடும் ஒரு ஜந்து ; முட்டைகளிடும் பிராணி இது வொன்றே ;

கே: 'சீட்டா' என்றால் என்ன? (Cheetah =ஓர் வகை சிறுத்தை.)

ப ; 'சிட்டா' என்பது ஒருவிதக் கணக்குப் புத்தகம் ; 'சித்தா' என்பது சீத்தாப் பழம் ; பூனை வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு துஷ்ட ஜந்து ; அமெரிக்காவில் காணப்படும் ஒரு உலோகம்.

கே : 'ஸப்த கோபுரங்கள்' எவை? (Seven Pagodas=மஹாபலிபுரம்.)

ப : ஸர்வதேச சங்கத்தைச் சேர்ந்த ஏழு ராஜாங்கங்கள் ; ரோமாபுரியிலுள்ள உலகின் ஏழு அற்புதங்கள் ; பாரசீக தேசத்திலுள்ள 7 பீட பூமிகள் ; கோஹினூர் வைரம், டாஜ் மஹால், மயிலாஸனம், சூயெஸ் கால்வாய், மாஸ்கோ மணி, சீன தேசத்தின் மகத்தான மதில் ; ஆப்பிரிக்க ஸ்தூபிகள் ; காசி, காஞ்சி, பூரி, மதுரை, மாயா, அவந்திகாபுரி, துவாரவதி ; யூதர்கள் கிறிஸ்துவை விற்றுப் பெற்ற ஏழு பொன் நாணயங்கள் :

கே : 'ஹம்பி' (Humpi) என்றால் என்ன ?

ப : ஒரு மலை வாசஸ்தலம் ; ஒட்டகத்திற்கு அராபியர் வைத்திருக்கும் அருமையான பெயர்.

ஹம்பி என்பது புராதன விஜயநகர ராஜ்யத்தின் தலைநகரென்பதை இந்த மக்குகள் அறிந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைக்க வில்லையா?

பி. ஏ. வகுப்பும், எஸ்.எஸ்.எல்.ஸி. வகுப்பும் படித்த இந்த மாணவர்கள் இவ்வாறு சாதாரண அறிவு கூட இல்லாமல் பரீக்ஷைகளில் அசடு வழிந்திருக்கிறார்கள். இந்த அபூர்வ மாப்பிள்ளைகளின் திருமணங்களுக்கு 'வர தக்ஷிணை' 'போக தக்ஷிணை' முதலியவைகளை மாமனார்கள் கொடுக்க வேண்டுமா வென்பதை அன்பர்கள் ஆலோசிக்கவும்.

பள்ளிக்கூட வண்டவாளம்

குழந்தைகளுக்கு அ, ஆ, சொல்லிக் கொடுக்கும் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இந்தியாவில் 1930-31ம் வருஷத்தில், முந்திய வருஷத்தை விட 456 பள்ளிக்கூடங்கள் குறைக்கப்பட்டு விட்டதாக அகில இந்திய கல்வி யதிகாரியின் அறிக்கை கூறுகின்றது.

இப்போது இந்தியாவில் 172, 230 ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் தானிருக்கின்றன. தேசத்தில் குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டும் என்ற ஆசை வரவர அதிகமாகி வரும்போது அதிகப் பள்ளிக் கூடங்களை ஏற்படுத்த வேண்டியது சர்க்கார் கடமை. ஆனால் எதற்கெடுத்தாலும் 'பணமில்லை' என்ற பல்லவியைப் பாடிக் கொண்டிருக்கும் சர்க்கார், கல்வி விஷயத்திலும் அதே பாட்டைப் பாடி சிக்கனக் கத்தியை வீசுவதை எவ்வாறு கண்டிக்காதிருப்பது?

கல்வி யதிகாரியின் ரிபோர்ட்டில் இன்னொரு விஷயம் காணப்படுகிறது. "பள்ளிக்கூட மாணவர்கள் கெட்டுப் போனதற்கு சட்ட மறுப்பு இயக்கமும் ஒரு காரணம்" என்று ஓரிடத்தில் கூறி யிருக்கிறார். எந்த இலாகாவிலாவது சர்க்காருக்கு தோல்வி ஏற்பட்டால் உடனே சட்டமறுப்பியக்கத்தின் மீது சீறி விழுவது உத்தியோகஸ்தர்களின் சம்பிரதாயமோ ?

அடுத்தாற் போல பெண் குழந்தைகளைப் பற்றிய புள்ளி விவரங்கள் கிடைத்துள. இந்தியாவின் கோடானுகோடி பெண் குழந்தைகளில் 22,60,154 பெண்கள் தான் எல்லா பள்ளிக் கூடங்களிலும், கல்லூரிகளிலும் படித்து வருகிறார்கள். மீதியுள்ள அத்தனை சிறுமிகளும் என்ன செய்து கொண்டிருக்கின்றனர்? மரப்பாச்சி போட்டு விளையாடுகின்றனரா? கல்யாண விளையாட்டில் ஆழ்ந்து கிடக்கின்றனரா ? இவ்வளவு பெரிய நாட்டில் 33,174, கல்வி நிலையங்கள் தான் பெண்களுக்கு ஏற்படுத்தப் பட்டிருக்கிறதென்றால் அது வெட்கத்தினும் வெட்கம் ! சிறுவர்களையும், சிறுமிகளையும் கட்டாயமாகப் பள்ளிக் கூடத்திற் கனுப்ப வேண்டுமென சர்க்கார் அகில இந்தியச் சட்ட மொன்று செய்யட்டுமே ! ருஷியாவிலும், அரேபியாவிலும் புத்துயிர் பிறந்திருப்பதால் கிழவர் கிழவிகள் கூட எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்கின்றார்கள். ஆனால் இந்தியாவிலோ குழந்தைகளுக்கே படிப்பைக் காணோம். இதற்கு தாய் தந்தையரைக் குற்றம் சொல்வதா ? சர்க்காரை குறை கூறுவதா ? அல்லது இருவரையுமா ?

"லண்டன் பேபர்—காலணு!"

"லண்டன் பேபர்—காலணு" என்று சென்னையில் விற்கப்படுகிறது. லண்டனில் ஒரு மாதத்துக்கு முன்னே வெளியான "....மெயில்" இப்படி இந்தியாவில் அடி படுவானேன்? சீமையிலிருந்து இந்தியாவுக்கு வரும் வாடிக்கைக் கப்பல்களில், ஏதாவது நிரப்பி அடிப்பாரமாக (Keel ballast) போட்டுக் கொண்டு வர வேண்டுமே, அதற்காக உப்பு மூட்டைகளையோ, பழைய நியூஸ் பேபர் கட்டுகளையோ போட்டுக் கொண்டு வருகின்றனர். 'இளிச்சவாயர்களான இந்தியர்களிடம் எந்தக் குப்பையையும் விற்றுக் காசாக்கி விடலாம்' என்ற சீமை வியாபாரிகளின் எண்ணம் பலித்து விடுகின்றது. பொட்டலங்கள் கட்டுவதற்கும், அசுத்தங்களைத் துடைப்பதற்கும் சீமைப் பத்திரிகைகள் இன்று உபயோகிக்கப் படுகின்றன.

1930-31-ம் வருடத்தில் 41150 டன் பழைய நியூஸ் பேபர் இறக்குமதியாயிற்று. போன வருடத்தில் 41850 டன் இறக்குமதியாயிருக்கிறது. இந்த வியாபாரம் நாளுக்கு நாள் வளுத்து வருகிறதே யொழியக் குறைய வில்லை. அதில் சுமார் ஐந்தில் நாலு பங்கு சீமைப் பத்திரிகைகள் என்ற புள்ளி விவரமும் கிடைத்துளது.

சென்னையில் ஒரு பவுண்டு பழைய நியூஸ் பேபர் ஓரணு விதம் விற்கப்படுகிறது. அதை வாங்கித் தான் கால் காலணுவுக்கு ஒரு பேபர் விதம் சிலர் விற்கிறார்கள். ஆகவே லக்ஷ ரூபாய்க் கணக்கில் தான் இந்த அருமையான சரக்கு இந்தியாவில் இறக்குமதி யாகின்றது என்பது தெரிய வருகிறது.

சீமையில் பத்திரிகாலயங்களில், உள்ளூர் விற்பனைக்கு அச்சிட்டதன் பின்னர் ஜாஸ்தியாக அச்சிட்டு 'பேல்' கட்டி விடுகின்றார்களாம். அன்றைய தினத்திலேயே அது 'பழையபேபர்' ஸ்தானத்தை அடைந்து இந்தியாவை நாடுகிறது. சீமைப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்பவர்களுக்கு இது விஷயத்தில் கோபம் கிடையாதாம். ஏனெனில் "விளம்பரங்களை நாற்காலியில் சாய்ந்து கொண்டு பார்த்தாலும் ஒன்று தான்; பொட்டலமாகக் கட்டி அதன் மேலே பார்த்தாலும் ஒன்று தான்" என்பது சீமை வியாபாரிகளின் கருத்து. இந்தியாவில் பழைய நியூஸ் பேபர் விற்பவர்களை, சாமான் விளம்பரத்திற்குக் கருவிகளாக உபயோகிக்கும் சூழ்ச்சியே சூழ்ச்சி!

தோற்றுப்போன வஸ்தாத்

'தோற்றுப் போன வஸ்தாத் துடை தட்டி எழுந்தானும்'! என்ற கதையாக இப்போது லங்காஷயர் பூச்சாண்டி காட்டத் தொடங்கியிருக்கிறது. இந்தியாவில் லங்காஷயர் துணி வியாபாரம் உறங்கிப் போய் விட்டது என்பது உலக மறிந்த விஷயம். ஆகவே மாஞ்செஸ்டர் வியாபாரச் சங்கம் இந்தியா மீது சீறி விழுந்திருக்கிறது.

"இந்தியாவில் லங்காஷயர் துணிகள் மீது போடப்பட்டுள்ள சுங்க வரி எதேஷ்டமாயிருக்கிறது. அவ்வரியை உடனே குறைத்துத் தீர வேண்டும். இல்லா விட்டால் இந்தியாவுக்கு அரசியல் சீர்திருத்த மெதையும் தரக் கூடாது. இந்தியாவுக்கு புதிய அரசியல் தருவதை எங்கள் பிரதிநிதிகளைக் கொண்டு பார்லிமெண்டில் எதிர்ப்போம்" என்று மேற்படி சங்கத்தார் பூச்சாண்டி காட்டுகின்றனர்.

இந்தப் பூச்சாண்டிக்கு அதே ஊரிலுள்ள மாஞ்செஸ்டர் கார்டியன் என்ற பத்திரிகை கொடுத்திருக்கும் சவுக்கடி இங்கு கவனிக்கத் தக்கது:

"இந்த மாதிரி மாஞ்செஸ்டர் சங்கம் கூறுவதினால் இந்திய தேசீய வாதிகளின் கோபம் அதிகரிக்கும். லங்காஷயரின் சுய நலத்தை அனைவரும் கண்டிப்பர். இந்தியச் சட்ட சபை, ஒட்டாவா ஒப்பந்தம் முதலிய எல்லாவற்றையும் நிராகரிப்பதா? அவ்வாறு செய்வதால் இந்தியாவைச் சுரண்டுவதே லங்காஷயருக்கு நோக்க மென்று உலகம் கூறுமன்றோ? இந்த சாமானைத் தான் இந்தியர் வாங்க வேண்டுமென்று பார்லிமெண்டார் வற்புறுத்தி வந்த அதிகாரம் மலையேறிப் போய்விட்ட தென்பதை ஷை சங்கம் உணரலாகாதா?"

ஆங்கில ஆலைத் தொழிலாளிகள் கத்திக் கொண்டு மண்டை வெடித்துப் போகட்டும். ஆங்குள்ள பத்திரிகைகள் சவுக்கடி தந்து கை சலித்துப் போகட்டும். நமக்கு அதைப்பற்றி அக்கரையில்லை. இத்தகைய மிரட்டல்களுக்கு இந்திய கவர்ன்மெண்டு நடுங்கி சுங்க வரியைக் குறைக்கலாகாது. அவ்வாறு குறைப்பதால் இந்திய சுதேசி இயக்கம் படுத்துப் போகுமன்றோ! அப்படியே சர்க்கார் செய்து வேண்டாத சாமான்களை இந்தியாவின் தொண்டையில் வைத்துத் திணித்தால் அது வாந்தி யெடுக்குமே யொழிய, விழுங்கி விடுமா என்ன?

ரஸமான துணுக்குகள்

இதுவன்றே சிக்கனம்!

முழத் துண்டு பக்கிரியான காந்திஜிக்கு சிக்கன புத்தி ரொம்ப அதிகம். உதாரணமாக ஒரு அங்குல நீளமாகும் வரை பென்ஸிலை உபயோகிப்பவர் அவர் தான். பென்ஸில் எங்கே யாவது காணமற் போய் விட்டால் அதைத் தேடி எடுக்கும் வரை ஓய மாட்டார். பென்ஸிலை சீவும்போது யாராவது ஒடித்து விட்டால் அவரைக் கண்டிப்பார். அதே மாதிரி தான் ஆந்திரத் தலைவரான பட்டாபி ஸீதாராமையாவும். தமக்கு வரும் கடுதாசிகள், கவர், முதலியவைகளையும் வீணாக்காமல் அவைகளின் மீது கட்டுரைகள் எழுதி அவர் பத்திரிகாலயங்களுக்கு அனுப்புவது வழக்கம். இப்போது ஷோலாப்பூரில் ஏழைகளின் அன்பரான ஸேத் ஹீராசந்த் ஜோஷி என்ற பெரிய வர்த்தகரைப் பற்றி கேள்விப்படுகின்றோம். க்ஷவர வேலை, வண்ணார வேலை முதலிய எல்லாவற்றிலும் தம்மைப் பற்றிய மட்டில் அவர் தாமே பார்த்துக் கொள்கின்றாராம். மேலும் அவர் அணிந்திருக்கும் ஷர்ட் வாங்கி 5 வருட மாயிற்றாம்; வேஷ்டி வாங்கி 3 வருட மாயிற்றாம்!

ஏன் ஜாஸ்தியாயிற்று?

மிஸ்டர் எப். ஜே. பிராட் என்பவர் இந்திய இராணுவச் செலவு பற்றி ஓர் துண்டுப் பிரசுரம் பிரசுரித்திருக்கிறார். "ஏழையான இந்தியாவின் இராணுவச் செலவு ஆஸ்திரேலியாவின் செலவை விட அதிக மிருப்பானேன்? மகா யுத்தத்துக்கு முன்னால் இராணுவத்தின் வருடச் செலவு 2 கோடி பவுனு யிருந்தது. 4 கோடி பவுனுக்கு மேல் தற்போது ஏறினதற்கு யாது காரணம்?" என்று பிராட் கேட்கின்றார். இந்திய இராணுவம் என்பது வேலை யில்லாத டாம்மிகளுக்கு வேலை கொடுப்பதற்காக இருக்கின்ற ஓர் ஸ்தாபன மென்று பலர் சொல்லுவ துண்டு. இருபது வருஷத்துக்கு முன்னே ஸோல்ஜர்களுக்கு சாதாரண ஜமக்காளத்தில் படுத்துக் கொண்டாலும் துயில் வரும். இப்போதோ கட்டில், மெத்தை, சாய்வு நாற்காலி எல்லாம் வேண்டி யிருக்கிறது. 'டாக்கி' 'ஸினிமா' பார்க்க வேண்டியிருக்கிறது. இத்தனை செலவுகளுக்கும் கட்டும்படியாக சம்பளம் கொடுத்து வருவதால் தான் ஒன்றுக்கு இரண்டு பங்காக இராணுவச் செலவு ஏறியிருக்கிறது.

போலி நாணயம்

நாணயச் செலாவணி சாத்திரத்தை அறிந்தவர்கள், ஒரு ரூபாய் நாணயமென்றால் அதில் ஒரு ரூபாய் வெள்ளியில்லை யென்பதையும் சும்மா நாணய மாற்றுவதற்கான ஓர் அடையாளமே யென்பதையும் அறிவார்கள். வட்ட மேஜையினின்று திரும்பி வந்துள்ள கவாஸ்ஜி ஜஹாங்கிர் என்பவர், "பிரிட்டிஷார் வட்ட மேஜை மகா நாட்டின் முடிவுகளால் ரூபாயில் 12 அணா கொடுத்திருக்கிறார்கள்" என்று கூறுகிறார். திரும்பிவந்த போன மச்சான்களில் இன்னொருவரான கேல்கர், "கிடைத்தது 2 அணா தானிருக்கும்" என்று மதிப்பு போடுகிறார். வட்டமேஜையில் தயாரிக்கப்பட்ட போலி நாணயம் செல்லாக் காசு என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கும் போது அதற்கு விலை மதிப்புப் போடுகின்ற இந்த வியாழன்களை என்னென்பது?

பென்ஷன் வாபீஸ்

ஐரோப்பிய மகா யுத்தத்தில் வீரமாகப் போரிட்ட இந்திய சிப்பாய்களுள் பண்டித குஷிநந்த் என்பாரும் ஒருவர். அவரை மெச்சி அவருடைய சண்டைக் காயங்களுக்காக கவர்ன்மெண்டார் மாதா மாதம் 15 ரூபா பென்ஷன் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

இருந்தாற் போலிருந்து பாரத நாட்டில் மகாத்மாவின் உபதேசங்கள் ஒலித்தன. மனிதர்களின் மனோ பாவங்களுக்கு பரீக்ஷை நடந்தது. ஆவேசத்தினாலோ, அல்லது முன்னே எந்த உணர்ச்சியோடு மகா யுத்தத்தில் குஷிநந்த் குதித்தாரோ அதே உணர்ச்சியோடோ, அவர் ஒரு மறியல் தொண்டரானார். மறியல் செய்த 'மகா' குற்றத்துக்காக தண்டிக்கப் பட்டார். அதோடு தண்டனை நின்றதா? அவரது பென்ஷனையும் சர்க்கார் நிறுத்தி விட்டார்களாம். ஆகவே இப்போது குஷிநந்தருக்கு ஐரோப்பிய யுத்தத்தில் உடம்பில் ஏற்பட்ட காயங்கள் தான் மிச்சம்! "சர்க்காருடைய தயவினின்று குஷிநந்தர் விழுந்து விட்டாராயினும் இப்போது அவருடைய உணர்ச்சிகள் எவ்வாறிருக்கு மென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?" என்று "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" கேட்கின்றது.

நிபந்தனைகள் கூடாது

ஆந்திர தேசத்திலுள்ள ஒரு ஹரிஜன சங்கத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் மகாத்மாஜி குறிப்பிட்டிருப்பதாவது:—

“தாங்கள் செய்து வந்துள்ள பாபத்திற்குப் பிராயச்சித்தமாகவே ஜாதி ஹிந்துக்கள் ஹரி ஜனங்களுக்குக் கோயில்களைத் திறந்து விட வேண்டும். இது அவர்களுடைய கடமை.

“ஹரி ஜனங்களின் முன்னேற்றம் கோயில் கதவு திறக்கப்படுவதிலேயே தொடங்க வேண்டும். கோயிலுக்குச் செல்லும் ஜாதி ஹிந்துக்களுக்குள்ள அத்தனை வாழ்க்கை நிபந்தனைகளும் ஹரி ஜனங்களுக்கும் உண்டு. ஆனல் தற்போது கோயிலுக்குள் செல்லும் ஒவ்வொரு ஜாதி ஹிந்துவும் அவற்றின்படி நடந்து வருகிறாரா இல்லையா என்பதை நாம் கண்டிப்பாகக் கவனிக்கிறோமா? அப்படியிருக்கையில் ஹரி ஜனங்கள் மீது மட்டும் பல நிபந்தனைகளைச் சுமத்துவது நியாயம் மீறிய செய்கையாகும். கள் குடித்தல், மாமிசம் புசித்தல் இவை ஜாதி ஹிந்துக்கள் மீது கட்டாயமாகச் சுமத்தப்படவில்லையானால், ஹரி ஜனங்களின் மீதும் அவை சுமத்தப்படக் கூடாது.

“மூன்றோ அல்லது நான்கு வைதிகர்கள் மட்டும் கோயிலின் முன்பு படுத்து பொய் சத்தியாக்கிரகம் புரிவார்களானால் அதைக் கண்டு எவரும் பயப்பட வேண்டியதில்லை. ஜாதி ஹிந்துக்கள் எந்த நிபந்தனைகளுடன், எவ்வளவு தூரத்திற்குக் கோயிலுக்குள் அனுமதிக்கப்படுகின்றனரோ, அதே நிபந்தனைகளுடன், அதே தூரத்திற்கு ஹரி ஜனங்களும் அனுமதிக்கப்படாத வரையில் கோயில் பிரவேச இயக்கம் சாகாது.”

அஹிம்சா மூர்த்தியை

“மகாத்மா காந்தியை பிற்போக்குக்காரரென்று ஸர் ஆல்பிரட் வாட்ஸன் கூறுகின்றார். பலாத்கார இயக்கத்தையும், புரட்சி இயக்கத்தின் வேகத்தையும் நாட்டில் குறைத்தவர் காந்திஜி தான். ஆனல் அவரைப் ‘பிற்போக்குக்கார’ ரென்று ஸர் ஆல்பிரட் வாட்ஸன் குறை கூறுகின்றார். இதுதான் நன்றியோ?”

—ஹி டைம்ஸ்.

தொழிற்சாலைகளால் என்ன முடியும்?

(ஆச்சாரியா பி. ஸி. ரே.)

மத்திய ஐரோப்பாவிலுள்ள ஜனங்களின் கிராம வாழ்க்கையைப் பற்றிய ஒரு விஷயம் நமக்குச் சிறந்த பாடமாக விளங்குகிறது. ஒழிந்த வேளைகளை அவர்கள் எங்ஙனம் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்பதையே அது அறிவிக்கின்றது. அந்த விவசாயிக்கு இந்த வேலை தான் தெரியும், இது தெரியாது என்பது கிடையாது. எல்லா வேலைகளையும் அவன் தெரிந்து கொண்டிருக்கிறான். வயலில் வேலையில்லாத காலங்களில் அவர்கள் குடிசைக்குள் உட்கார்ந்து, தங்கள் குடும்பத்திற்கு வேண்டிய சாமான்களையெல்லாம் செய்துகொள்கிறார்கள். பாத்திரங்கள் செய்தல், தச்சு வேலை, கத்திகள் செய்தல் இவற்றைக் கவனிக்கின்றனர். ஸ்திரீகள் நூல் நூற்கிறார்கள்; நெய்கிறார்கள்.”

பம்பாய் பருத்தி ஆலைகள் 3 அல்லது 4 லக்ஷம் பேர்களுக்கு வேலை கொடுக்கின்றன; கல்கத்தா ஆலைகளும் அப்படித்தான். கான்பூர் ஆலைகளில் ஒன்று, இரண்டு லக்ஷம் தொழிலாளிகளுக்கு வேலை கிடைக்கின்றது. இம்மாதிரி இந்தியத் தொழிற்சாலைகள் மூலமாக சுமார் 20 லட்சம் இந்தியருக்கு வேலை கிடைக்கலாம். மற்ற 30 கோடிக்கும் மேலான மக்களின் கதி என்னவது? இந்தியாவில் மாஞ்செஸ்டர்களும், லிவர்பூல்களும் தோன்றி கிராமங்களில் 100க்கு 80 பேர்களை நகரங்களுக் கிழுக்கும் வரையில் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறீர்களா? இது நடக்கிற காரியமா? ஆகவே கிராமக் கைத்தொழில்களை உயிர்ப்பிப்பதைத் தவிர இந்தியாவின் வறுமையைப் போக்க வேறு மார்க்கமில்லை.

"அழகியின் காதல்"

'பெர்னர்ட் ஷா' என்பவர் குத்தலாகப் பேசுவதில் பெயர் போனவர். சில வருஷங்களுக்கு முன்னே அவரை ஒரு அழகி காதலித்துக் கடிதம் எழுதினளாம்:

"நானே நல்ல அழகுடையவள். உம்முடைய அறிவோ அபாரமானது. ஆகவே நாம் இருவரும் மணந்து கொண்டோமானல் நல்ல புத்தியும், அழகும் உடைய ஒரு குமாரனைப் பெற்று விடலா மல்லவா?" என்று அவள் யோசனை கூறினள். அதற்கு பெர்னர்ட் ஷா நேர் எதிரிடையாக ஓர் கடிதம் எழுதினர்:

"பிறக்கும் பிள்ளை எவ்வாறிருக்குமோ யார் கண்டது? உன்னுடைய மூளையோடும், என்னுடைய உருவத்தோடும் பிறந்தாலும் பிறக்கலா மல்லவா? ஆகவே உனது 'அப்ளிகேஷன்' வாபீஸ் செய்யப்பட்டது" என்று ஷா எழுதினராம். சுத்த மண்டுவாயும், குரூபமாயும் குழந்தை பிறக்கலா மல்லவா வென்பது அறிஞரின் கருத்து.

இந்தக் கதையை இந்திய ராஜீய உலகத்தில் இப்போது நுழைத்துப் பார்க்கலாம். சில மிதவாதிகள் பிரிட்டிஷ் பிரதம மந்திரியான மாக்டனல்டினிடம் வாக்கு கொடுத்துவிட்டு வந்திருக்கிருர்களாம். ஆகவே வட்ட மேஜையைப் பற்றி பிரமாதமாகப் புகழ்ந்து சந்து பொந்துகளில் பேச ஆரம்பித்திருக்கிருர்கள். இனிமேல் வரப் போகின்ற அரசியல் சபைகளில் நுழைந்து வேலை செய்ய வேண்டு மென்று பம்பாயிலும், அலகாபாத்திலும் பிதற்றுகின்ருர்கள்.

"இந்தியர்கள் என்ற பெயரோடு நாங்கள் தயாராக இருக்கிறேம். ஆளக் கூடியவர்கள் என்ற பெருமை ஆங்கிலேயருக்கு உண்டு. ஆகவே இரு கோஷ்டியும் சேர்ந்து புதிய அரசியலை நடத்தினல் நல்ல பலன்கள் உண்டு" என்று சொல்கிருர்களாம். அழகி எழுதிய காதல் கடித தோரணையில் இது இருக்கிறது.

இந்த மிதவாதிகளிடத்தில் தேச பக்தி என்ற சரக்கு பூஜ்யம். 'ஹோர்' போன்ற பிரிட்டிஷாரிடம் 'அடக்கு முறை' என்ற சக்தி அதிகம். இந்த இரண்டு கோஷ்டியும் சேர்ந்து சிருட்டித்த புதிய அரசியல் எப்படி யிருக்கு மென்பதை சொல்லவும் வேண்டுமா?

ஷா சொன்னது போல மூளை யில்லாத குரூபமான குழந்தையையே இவர்களும் படைக்கப் போகிருர்கள்.

எமன் டிவாலரா

எட்மன் டிவாலரா என்ற அயர்லாந்து தலைவனை எமன் டிவாலரா என்றே அழைக்கலாம். சமீபத்தில் நடந்த ஐரிஷ் தேர்தலில் அவன் கட்சியாரே பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப் பட்டு விட்டனர். ஆச்சர்யம்! இனிமேல் ஆங்கிலேயர் அவனிடம் பேசும்போது ஒரு ஸ்வரம் குறைத்தே பேசுவார்கள். சட்ட சபை கூடியதும் இரண்டு காரியங்களை டிவாலரா செய்யப் போவதாகச் செய்தி கிடைத்துளது.

1. அயர்லாந்து சட்ட சபையினர் ராஜ விசுவாசப் பிரமாணம் செய்யும் வழக்கத்தை நிறுத்தி விடல்.

2. கவர்னர்-ஜனரல் உத்தியோகத்தை ஒழித்து விடுதல்.

இந்த இரண்டு காரியங்களும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் நிர்வாகத்திலேயே பெரிய புரட்சியை உண்டாக்கப் போகின்றது.

அயர்லாந்தின் மகா வீரனை டிவாலராவின் நாடகத்தைப் போல தாமும் இந்தியாவில் நடிக்கப்போவதாக ஸப்ரூ ஓரிடத்தில் சொல்லியிருக்கிருர். டிவாலராவின் உத்தரவு கிடைத்தால் உயிரையும் தத்தம் செய்ய ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அங்கு தயாராயுளர். ஆனல் ஸர் டேஜ்பகதூர் ஸப்ரூவின் வாய் திறந்தால்—

"வாடகைத்துப் பெண்கள்!"

மகா, மகா, மகா மே. த. ஸர் மால்காம் ஹெய்லி ஐக்கிய மாகாணத்தில் ஒரு கூட்டத்தில் பேசியபோது "சிறு பெண்களையும், கிழ மாதரையும் வாடகைக்குப் பேசி ஜெயிலுக்குப் போகச் சொல்லி தேச பக்தர்களாக்கி விடுகின்றனர்" என்று சட்டமறுப் பியக்கத்தைத் தாக்கிப் பேசினராம். இவருடைய அசிங்கப் பேச்சுக்கு மார்க்குத் தருவதா, அல்லது அதிகப் பிரசங்கத்துக்கு மார்க்குத் தருவதா வென்று தெரியவில்லை.

"குரும்பாடு பயில்வான்கள்"

சென்னையில் 'குரும்பாடு பயில்வான்களின் குஸ்தி' என்று விளம்பரங்கள் பறக்கின்றன. ஒரு வேளை சென்னைச் சட்ட சபையைப்பற்றி ஏதாவது புத்தகமோ என்று நினைக்க நேரிட்டது. கடைசியில் ஆட்டுக் கடாச் சண்டை யென்று தெரிந்தது.

நமது கிளிஞ்சல் குவியல்

சுப்பராயனின் ஆலயப் பிரவேச மசோதாவைத் தழுவி டெல்லி சட்ட சபைக்கு ரங்கய்யர் தயாரித்தனுப்பிய மசோதாவுக்கு வைஸ்ராய் அநுமதி கொடுத்து விட்டார்.

திருக்கோவிலூரில் சென்ற வருஷத்தில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய ஹரி ஜனங்களின் தொகை மொத்தம் 76.

பருத்தி மார்க்கட்டை மறியல் செய்ததற்காக பம்பாயில் 4 ஸ்திரீகளுக்கு தலா 6 மாதம் சிறையும், 40 ரூ. அபராதமும்.

நதியாதில் ராஜிய இளைஞர் மகா நாட்டை கூட்ட யத்தனிக்கையில் 100 வாலிபர்கள் கைதியானார்கள்.

ராஜீயக் கைதிகளை கொடுமையாக நடத்துவதை நிறுத்த வேண்டுமென்று இந்திய க்ஷேமாபிவிருத்தி சங்கத்தார் சர்க்காருக்கு எழுதி யிருக்கின்றனர்.

காசியில் மோகல்ல நரிங்கா என்பவரின் வீடு சோதனை யிடப்பட்டது. கக்கூஸையும், சமையலறையையும் கூட சோதனை யிட்டனராம்.

அலகாபாத்தில் உட்பக்கம் பூட்டப்பட்ட ஒரு வீட்டில் கூடி யிருக்கையில் 31 காங்கிரஸ் சர்வாதிகாரிகள் கைது செய்யப்பட்டனர். போலீஸார் அடுத்த வீட்டின் வழியாக இவ்விட்டிற்குள் சென்றனர். கைதியானவர்களில் 14 பேர் ஸ்திரீகள்.

டெல்லி "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகையின் காரியாலயத்தையும், அதன் மானேஜரின் வீட்டையும் போலீஸார் சோதித்தனர்.

தேசியக்கொடி மகாராஜாவின் துரைத்தனத்துக்கு எதிரானதாக விருப்பதால் அதை ஒரு மாத காலத்திற்கு நாட்டவோ, ஊர்வலமாக எடுத்துச் செல்லவோ கூடாதென மைசூரைச் சேர்ந்த 11 பேர்கள் மீது தடை யுத்திரவு.

திருநெல்வேலி சுயேச்சை தினக் கைதிகளான நாராயணய்யருக்கும், இசக்கியா பிள்ளைக்கும் தலா 6 மாதம் கடுங்காவல்.

ஸ்பெஷல் கான்ஸ்டபிலாக வேலை செய்ய மறுத்த மிதுனபுரி கிரிஷ் சந்திரருக்கு 40 ரூ. அபராதம். இதற்குப் பிறகு மீண்டும் அதே மாதிரி நோட்டீஸ்.

பம்பாயில் 54-வது அவசரச் சபைத் தலைவரும், இன்னும் நால்வரும் கைதியாயினர்.

வடாற்காடு ஜில்லா வாலாஜாபேட்டை கோர்ட்டில் ஆட்சேபகரமான துண்டுப் பிரசுரங்களை வழங்கியதாக மூவர் கைதியாயினர்.

ஞாயிறன்று 3 தொண்டர்கள் வால்டேர் பாசெஞ்சரின் சங்கிலியைப் பிடித்திழுத்துத் துண்டுப் பிரசுரங்கள் வழங்கியதற்காகக் கைது செய்யப்பட்டனர்.

28உ பர்ஹாம்பூரில் அபினிக் கடையை மறியலிட்ட 2 தொண்டர்கள் கைதியாயினர்.

கோலாரில் சாரனர் வருஷ விழாவின்போது நடந்த பரிசளிப்பில் ஒருவருக்கு ஜவஹரிலாலின் படம் வழங்கப் படுவதைக் கமிஷனர் தடுத்து விட்டாராம்.

சென்னையின் பல இடங்களிலும் இப்பொழுது சில தினங்களாக அன்னியத் துணிக் கடை மறியல்கள் பலமாக நடந்து வருகின்றன. சனி, ஞாயிறுகளில் மட்டும் இது சம்பந்தமாக 61 தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

சுயேச்சைதின ஊர்வலம் நடத்தியதற்காக முன்ஷிகஞ்சில் 4 ஸ்திரீகள் கைதியாயினர்; இதே மாதிரி கிரிமனல் கோர்ட்டு காம்பவுண்டில் 4 ஸ்திரீகள் கைதியாயினர். கள்ளிக் கோட்டையில் மேலும் மூவர். பாட்னாவில் 245 பேர்கள் கைதியாகியுள்ளர்; 28உ கல்கத்தாவில் ஊர்வலமாகச் சென்ற 44 ஸ்திரீ தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

வங்காளத்தைச் சேர்ந்த பதம் கஞ்சில் சுமார் 700 பேர்களடங்கிய கூட்டமொன்று போலீஸ் ஸ்டேஷனண்டை கூடி, தேசியக் கொடி போட எத்தனித்தது. போலீஸ் தடியடிக்கும் கூட்டம் கலையாததால் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. அறுவருக்குப் படுகாயம். தடியடியால் பலருக்குக் காயம்.

ஞாயிறன்று எழும்பூர் ஏரியிலுள்ள 'ரேடியோ' கம்பத்தில் சில தொண்டர்கள் தேசியக் கொடி நாட்டி, வணக்கம் செய்து, வந்தவர்களுக்குக் கரும்புத் துண்டுகள் வழங்கினராம்.

பெஜவாடாவில் இரண்டு தொண்டர்கள் மாஜிஸ்திரேட் கோர்ட்டிற்குச் சென்று காங்கிரஸ் கோஷமிட்டு, துண்டுப் பிரசுரம் வழங்குகையில் கைதியாயினர்.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras,